## ஹெபடைடிஸ் B என்றால் என்ன?

ஹெபடைடிஸ் B என்பது ஹெபடைடிஸ் B வைரஸால் ஏற்படும் ஒரு தீவிர கல்லீரல் தொற்று ஆகும். இது சில வாரங்களுக்கு ஏற்படும் இளநிலை பாதிப்பாக இருக்கலாம் அல்லது ஆயுட்காலத்திற்கும் ஏற்படும் தீவிரமான நோயாகவும் இருக்கலாம்.

நீடித்த ஹெபடைடிஸ் B பாதிப்பு கொண்ட 4 இல் 1 நபருக்கு புற்றுநோய் உட்பட தீவிர கல்லீரல் பிரச்சனைகள் ஏற்படலாம், ஆனால் முன்கூட்டியே கண்டறியப்பட்டால், சிகிச்சைகளும் கண்காணிப்புகளும் உள்ளன.

## ஹெபடைடிஸ் B எவ்வாறு பரவுகிறது?

பாதிக்கப்பட்ட ரத்தம் அல்லது உடல் திரவங்களின் தொடர்பு மூலம் ஒரு நபரிடம் இருந்து மற்றொருவருக்கு ஹெபடைடிஸ் B பரவும். பின்வரும் வழிகளில் கடத்தப்படலாம்:

- பிரசவத்தின்போது கர்ப்பிணியிடமிருந்து குழந்தைக்கு
- ஹெபடைடிஸ் B கொண்ட நபரின் ரத்தத்துடன் தொடர்பு ஏற்படும் பொழுது
- ஹெபடைடிஸ் B கொண்ட நபரின் பல் துலக்கும் பிரஷ்கள், ரேஸர்கள், நகம் வெட்டிகள் போன்ற தனிச் சுகாதாரப் பொருட்கள் அல்லது மருத்துவ உபகரணங்களைப் (குளுக்கோஸ் கண்காணிப்புமானி) பகிருதல்
- பாலியல் தொடர்பு
- ஊசிகள், சிரிஞ்சுகள் அல்லது மருந்து தயாரிக்கும் உபகரணத்தைப் பகிருதல்

## ஹெபடைடிஸ் B பின்வரும் வழிகளில் பரவாது:

- உணவு அல்லது உண்ணும் பாத்திரங்களைப் பகிருதல்
- அணைத்தல், முத்தமிடுதல் அல்லது கைகளைப் பிடித்தல் போன்ற சாதாரணத் தொடர்புகள்
- நீர் அல்லது காற்று

## மேலும் தகவல்களுக்கு:

**Centers for Disease Control and Prevention (CDC, நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையங்கள்)**
www.cdc.gov/hepatitis/hbv/

Hep B Hub
doh.wa.gov/hepbhub

DOH 420-405 May 2022 Tamil

இந்த ஆவணத்தை வேறொரு வடிவத்தில் கோருவதற்கு, 1-800-525-0127 ஐ அழைக்கவும். காது கேளாதோர் அல்லது கேள் திறன் குறைபாடு உள்ள வாடிக்கையாளர்கள், தயவுசெய்து 711 (Washington Relay) ஐ அழைக்கவும் அல்லது civil.rights@doh.wa.gov ற்கு மின்னஞ்சல் செய்யவும்.

ஆதாரம்: Minnesota Department of Health, Hepatitis B



# ஹெபடைடிஸ் B: அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டியவை

Washington State Department of Health




## யாரெல்லாம் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்?

உங்களுக்கு ஹெபடைடிஸ் B இருக்கிறதா என்பதை அறிந்து கொள்ளும் ஒரே வழி பரிசோதனை செய்துகொள்வது மட்டும் தான்.

- அனைத்து கர்ப்பிணிகளுக்கும் தொடர்ந்து ஹெபடைடிஸ் B பரிசோதனை செய்யப்பட வேண்டும். கர்ப்பமாக உள்ள ஒருவருக்கு ஹெபடைடிஸ் B இருந்தால், சரியான நேரத்தில் தடுப்பூசி எடுத்துக்கொள்வதன் மூலம் குழந்தைக்கு வைரஸ் பரவாமல் தடுக்க முடியும்.
- ஹெபடைடிஸ் B உள்ளவர்களுடன் ஒன்றாக வசிப்பவர்கள்.
- ஹெபடைடிஸ் B பாதிப்பு ஏற்படுவதற்கான அதிகரித்த ஆபத்தில் இருப்பவர்கள், பின்வரும் சூழ்நிலைகளில் உள்ளவர்கள்:
  - ஆப்ரிக்கா அல்லது ஆசியா போன்று ஹெபடைடிஸ் B பரவலாகக் காணப்படும் பகுதிகளில் பிறந்தவர்கள், அல்லது அந்தப் பகுதிகளில் பிறந்த பெற்றோர் உள்ளவர்கள்
  - போதை மருந்து செலுத்திக்கொள்பவர்கள்
  - ஆண்களுடன் உடலுறவு கொள்ளும் ஆண்கள்

## யாரெல்லாம் தடுப்பூசி பெற்றுக்கொள்ள வேண்டும்?

Centers for Disease Control and Prevention (CDC) பின்வருபவர்கள் உட்பட பெரும்பாலானோருக்கு ஹெபடைடிஸ் B தடுப்பூசியைப் பரிந்துரைக்கிறது:

- அனைத்து கைக்குழந்தைகள்
- ஆபத்துக் காரணிகள் தொடர்பின்றி, 59 வயது வரை உள்ள தடுப்பூசி எடுத்துக்கொள்ளாத குழந்தைகள் மற்றும் பெரியவர்கள்
- கீழ்கண்ட ஆபத்துக் காரணிகளைக் கொண்ட 60 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய பெரியவர்கள்:
  - பாலியல் வெளிப்பாடு மூலம் தொற்று ஏற்படும் ஆபத்து உள்ளவர்கள்
  - ரத்தத்திற்குத் தோல்வழியாக அல்லது சளிச்சவ்வு வழியாக வெளிப்படும் ஆபத்து உள்ளவர்கள்
  - மிதமான மற்றும் அதிக ஹெபடைடிஸ் B பாதிப்பு விகிதங்கள் கொண்ட பகுதிகளுக்குப் பயணம் செய்பவர்கள்
  - நீடித்த கல்லீரல் நோய் உள்ளவர்கள்
  - HIV தொற்று உள்ளவர்கள்
  - சிறைப்படுத்தப்பட்டவர்கள்
  - ஹெபடைடிஸ் B இல் இருந்து பாதுகாப்பு கோரும் அனைவரும்



**உலகம் முழுவதும் 296 மில்லியன் மக்கள்**
**ஹெபடைடிஸ் B நோயுடன் வாழ்வதாக மதிப்பிடப்படுகிறது, ஆனால் அவர்கள் நோய்வாய்ப்பட்டவர்களாகத் தென்படவோ அல்லது உணரவோ மாட்டார்கள் என்பதால், நோய் தொற்று ஏற்பட்டது அவர்களுக்குத் தெரிவதில்லை.**



## இந்தத் தடுப்பூசி பாதுகாப்பானதா?

ஹெபடைடிஸ் B தடுப்பூசி பாதுகாப்பானது மற்றும் திறன்மிகுந்தது. 1982 முதல் இது U.S. இல் உபயோகிக்கப்படுகிறது.

உலகம் முழுவதும் ஒரு பில்லியன் டோஸ்களுக்கும் அதிகமான ஹெபடைடிஸ் B தடுப்பூசி கொடுக்கப்பட்டுள்ளன.

இளந்தீவிரம் முதல் மிதமான காய்ச்சல் மற்றும் ஊசி செலுத்தப்பட்ட இடத்தில் வலி ஆகியவை இந்தத் தடுப்பூசியின் பொதுவான விளைவுகள் ஆகும். இந்தப் பக்க விளைவுகள் 1-2 நாட்களுக்கு நீடிக்கலாம்.

## நான் எங்கே ஹெபடைடிஸ் B தடுப்பூசியைப் பெறலாம்?

தடுப்பூசி செலுத்துவது குறித்து உங்கள் மருந்தகம், சுகாதார வழங்குநர் அல்லது உள்ளூர் சுகாதாரத்துறையுடன் பேசுங்கள் சில மருத்துவமனைகளில் ஹெபடைடிஸ் B தடுப்பூசிகள் இலவசமாக அல்லது குறைந்த விலையில் வழங்கப்படுகின்றன.

59 வயது வரை உள்ளவர்கள் மற்றும் ஆபத்துக் காரணிகள் கொண்ட 60 வயதுக்கும் மேற்பட்டவர்கள் தடுப்பூசியை மருத்துவக் காப்பீட்டின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.

நீங்கள் குழந்தை பெற்றிருந்தால், மருத்துவமனையிலிருந்து வருவதற்கு முன்னர் உங்கள் குழந்தைக்கு ஹெபடைடிஸ் B தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளலாம். பச்சிளம் குழந்தைகளுக்கு தடுப்பூசி இலவசமாகவே வழங்கப்படுகிறது.